S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
Sri Murugan Jewellery Mart
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 331 | 24.05.2026 | SUNDAY | VAIKASI : 10 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 331 | 24.05.2026 | ஞாயிற்றுக்கிழமை | வைகாசி : 10 | விலை : ரூ.5/-

## கோவை சிறுமி பாலியல் வழக்கு

# "உடனடியாக நடவடிக்கை!"

சென்னை: மே.24-

கோவையில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில், தேவையான அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படும் என முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கோயம்புத்தூரில் நேற்று 10 வயது சிறுமிக்கு நிகழ்ந்த கொடூர சம்பவம் மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது. இத்தகைய மனிதநேயமற்ற மற்றும் மன்னிக்க முடியாத குற்றச் செயல்கள் நமது சமூகத்தில் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

தங்கள் உயிருக்குயிரான குழந்தையைப் பிரிந்து வாடும் சிறுமியின் குடும்பத்தைச் சார்ந்த சொந்தங்களுடன் எனது ஆழ்ந்த துயரத்தைப் பகிர்ந்துகொள்கிறேன்.

இந்த வழக்கில் தொடர்புடையதாக இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்துத் தீவிர மற்றும் விரைவான விசாரணை மேற்கொண்டு, குற்றப்பத்திரிகையை உடனடியாக தாக்கல் செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளேன்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் இத்தகைய அராஜக செயல்களில் ஈடுபடுவோருக்கு சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை பெற்றுத்தர தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்படும். இதற்கான உடனடி மற்றும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்." இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## கோவை கொடூரம் : குற்றவாளிகள் விரைவாகவும் கடுமையாகவும் தண்டிக்கப்பட வேண்டும்: உதயநிதி

சென்னை: மே.24-



கோவையில் 10 வயது சிறுமி கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், மிருகத்தனமான இந்த செயலைச் செய்த குற்றவாளிகள் விரைவாகவும் கடுமையாகவும் தண்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கோவையில் 10 வயது சிறுமி, கடத்தி கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தி இருக்கிறது. இந்த கொலை சம்பவத்துக்கு உண்மையான நீதி வேண்டும் என்ற குரல், எல்லாம் பக்கமும் ஒலிக்கிறது.

இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிற இந்த கொடூர சம்பவத்தைக் கண்டித்து, கோவை மக்கள் விடிய விடிய போராட்டம் நடத்துகிறார்கள்.

இந்த மிருகத்தனமான செயலைச் செய்த உண்மை குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையை விரைந்து பெற்றுத் தர வேண்டும்.

இந்த இக்கட்டான நேரத்தில், சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, திமுக அவர்களுக்கு துணையாக நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அரசு பொறுப்பேற்றதிலிருந்து, 12 நாட்களில் பாலியல் வன்கொடுமை, கஞ்சா கடத்தல், ரவுடிகள் தாக்குதல், ஆளுங்கட்சியினரின் அத்துமீறிய அராஜகம், தற்போது கோவை சிறுமி கடத்தி கொலை உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட பெரிய நிகழ்வுகள் செய்திகளாக வந்து கொண்டே இருப்பது, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை கேள்விக்குறியாக்கி உள்ளது.

இனி ஒரு சம்பவம் இதுபோல் நடக்காமல் இருக்க சட்டம் ஒழுங்கிற்கு முதல் முக்கியத்துவத்தை முதல்வர் தர வேண்டும் என தமிழ்நாட்டு மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

## கரூர் : விவசாயி மீது துப்பாக்கிச்சூடு 10 இடங்களில் குண்டு பாய்ந்து காயம்

கரூர்: மே.24-

கரூர் மாவட்டம் கடவூர் அருகே விவசாயி மீது மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த விவசாயி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



கரூர் மாவட்டம் கடவூர் வட்டம் சேவாப்பூரை அடுத்த வளையபட்டியைச் சேர்ந்தவர் முருகன். இவர் மகன் கருணைகிரி (48). விவசாயி. இவர் நேற்றிரவு 9.45 மணிக்கு அவரது களத்து வீட்டுக்கு செல்லும்போது அடையாளம் தெரியாத நபர் நாட்டு துப்பாக்கியால் சுட்டதில் இடுப்பு, முதுகில் 10 பால்ரஸ் குண்டுகள் பாய்ந்து காயமடைந்தார்.

காயமடைந்த கருணைகிரியை அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் மீட்டு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இதுகுறித்து கரூர் மாவட்டம் பாலவிடுதி போலீஸார் வழக்குப் பதிவு செய்து சந்தேகத்தின் பேரில் அப்பகுதியைச் சேர்ந்த சிலரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## "கோவை சிறுமி கொலை வழக்கில் காவல்துறை துரிதமாக செயல்படவில்லை" : இபிஎஸ் குற்றச்சாட்டு

சென்னை: மே.24-

கோவை மாவட்டம் சூலூர் அருகே சிறுமி காணாமல் போன சில மணி நேரத்திலேயே புகார் அளிக்கப்பட்ட போதிலும் துரித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டியுள்ள எடப்பாடி பழனிசாமி, சட்டம்ஒழுங்கு மற்றும் நிர்வாக திறனில் உள்ள குறைபாடுகளையே இது காட்டுவதாக விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோவை மாவட்டம் சூலூர் அருகே 10 வயது சிறுமி கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கும் சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. அந்த சிறுமி உயிரிழப்பதற்கு முன்பு பாலியல் துன்புறுத்தலுக்கும் ஆளாகியிருக்கலாம் என்ற தகவல்கள் வெளியாகி மக்களிடையே மேலும் அச்சத்தையும் கோபத்தையும் உருவாக்கியுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய இந்த அரசு, இத்தகைய கொடூர சம்பவங்களைத் தடுக்கத் தவறியது வேதனைக்குரியது.

சிறுமி காணாமல் போன சில மணி நேரத்திலேயே புகார் அளிக்கப்பட்டிருந்த போதிலும், துரிதமான நடவடிக்கை எடுக்கப்படாதது சட்டம் ஒழுங்கு மற்றும் நிர்வாக திறனில் உள்ள குறைபாடுகளை வெளிக்காட்டுகிறது.

பல மணிநேர போராட்டத்திற்கு பிறகு இந்த சம்பவத்தில் தொடர்புடையதாக இருவர் கைது செய்யப்பட்டிருந்தாலும், ஒரு ஏதுமறியா சிறுமியின் உயிரை காப்பாற்ற முடியாத நிலை அரசின் அலட்சியத்தையும் செயல்திறன் குறைவையும் சுட்டிக்காட்டுகிறது.

இந்த அரசு பெண்கள் பாதுகாப்பு குறித்து வெறும் விளம்பர நடவடிக்கைகளில் மட்டும் அல்லாமல், நிலையான மற்றும் பயனுள்ள பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்குவதிலும் தீவிரம் காட்ட வேண்டும். வெறும் ரீல்ஸ் அரசாக அல்லாமல் ரியல் அரசாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த மனிதாபிமானமற்ற குற்றச்செயலை வன்மையாக கண்டிப்பதுடன், குற்றவாளிகளுக்கு சட்டப்படி கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத வகையில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த அரசு உடனடி மற்றும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்" என தெரிவித்துள்ளார்.

## "தேர்தல் முடிவுகளுக்குப் பின் திமுக கூட்டணியை காப்பாற்றும் வலிமை எனக்கு இல்லை" : திருமாவளவன்

சென்னை: மே.24-



"தேர்தல் முடிவுகளுக்குப் பின் திமுக தலைமையிலான கூட்டணியை காப்பாற்றும் வலிமை எனக்கு இல்லை. தமிழ்நாட்டின் அரசியல் நெருக்கடியால் இந்த முடிவை எடுத்தோம் என்பதை மு.க.ஸ்டாலின் அறிவார்" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் விசிக ஆகிய கட்சிகள் அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என தவெக சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. அதன் பின்னர் தொண்டர்கள் மற்றும் முன்னணி பொறுப்பாளர்களுடன் மீண்டும் இது குறித்து கலந்து பேசினோம். எட்டாம் தேதி நடந்த உயர்நிலை குழு கூட்டத்தில் பெரும்பான்மையான தோழர்கள் ஆதரவு நல்குவது என முடிவெடுத்து விட்ட பிறகு அமைச்சரவையில் இடம்பெறுவது தான் சரியாக இருக்கும் என்ற கருத்தை முன் வைத்தார்கள்.

ஆனாலும் நான் கட்சியின் தலைவர் என்கிற முறையில் பொதுச்செயலாளர்களோடு மீண்டும் பேசிவிட்டு தான் முடிவை எடுப்பேன்; அந்த முடிவு என்னவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என கூறி விட்டேன்.

விசிக எடுத்த முடிவுக்கு பதவி ஆசை காரணம் இல்லை. தமிழ்நாட்டின் அரசியல் நெருக்கடியால் இந்த முடிவை எடுத்தோம் என்பதை மு.க.ஸ்டாலின் அறிவார். நானே அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்ற கருத்து வந்தபோது நான் அதற்கு இணங்கவில்லை. அமைச்சரவையில் இடம்பெறுவது உறுதிபடுத்தப்பட்டபோது வன்னி அரசை பரிந்துரைப்பதே சரி என முடிவு செய்தேன்.

தவெக அமைச்சரவையில் இடம்பெற்றது குறித்து மேற்கொண்டு கருத்து சொல்வதற்கு எதுவுமில்லை. தேர்தல் நேரத்தில்தான் யாருடன் பயணிப்பது, கூட்டணி என்பது குறித்த முடிவுகளை எடுப்பது வழக்கம். தேர்தலுக்கு முந்தைய காலத்தில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி நீடிக்க வேண்டும், அக்கூட்டணி வலுப்பெற வேண்டும் என்பதற்காக என்னாலான முயற்சிகளை செய்தேன்.

என்னை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்தி திமுக கூட்டணியை சிதறடிக்க பல முனைகளில் இருந்தும், பல தரப்பினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். அதற்கு சற்றும் இடம் கொடுக்காமல் நான் உறுதியாக நின்றேன். திமுக கூட்டணியை பலவீனப்படுத்த ஒரு போதும் இடம் தர மாட்டேன் என்பதை நடைமுறைப்படுத்தி காட்டுகிறேன். இதில் யாரும் மாற்றுக் கருத்தை சொல்ல முடியாது. என்னை குறிவைத்து சாதிய, மதவாத கட்சிகள் காய்களை நகர்த்தினார்கள். கோபமூட்டினார்கள்; ஆத்திரமூட்டினார்கள். என்னால் எந்த அளவுக்கு உறுதிணையாக இருக்க முடியுமோ, அந்தளவுக்கு துணையாக இருந்தேன்.

ஆனால் தேர்தலுக்கு பின் கூட்டணியை காக்கும் வலிமை எனக்கு இல்லை. காங்கிரஸ் எடுத்த முடிவை தடுக்கும் வலிமை எனக்கில்லை; கம்யூனிஸ்டுகள் எடுத்த முடிவை நிறுத்த எனக்கு வலிமை இல்லை. தமிழக மக்கள் கூட்டணி ஆட்சியை விரும்புகின்றனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் நிலைபாட்டில் என்னால் தலையீடு செய்ய முடியாது. சமூக ஊடகங்களில் என் மீது மட்டும் அவதூறு கணைகளை வீசிவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. காலத்தின் கட்டாயத்தால் கூட்டணி ஆட்சி ஏற்பட்டுள்ளது. இடதுசாரிகளின் முடிவை முன்வைத்து எங்கள் கட்சியில் ஆலோசித்து பின்னர் முடிவெடுத்தோம். நாங்கள் திமுக கூட்டணியில் இருந்தோம். ஆதரவு நல்குவதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அது எங்களின் உரிமை, சுதந்திரம். அதில் யாரும் தலையிட முடியாது.

திருமாவளவன் ஏன் தாமதப்படுத்துகிறார். தாமதத்துக்கு இது தான் காரணமா என வாய்க்கு வந்தபடி பேசினார்கள். அவதூறுகளை அள்ளி வீசினார்கள். எங்களின் அரசியல் உரிமையையோ, நேர்மையையோ கலங்கப்படுத்த யாருக்கும் உரிமை இல்லை. எங்கள் கட்சிக்கு ஒரு விதிமுறை, வரையறை இருக்கிறது.

ஒரு கட்சியை உருவாக்கி அந்த கட்சியை 10 ஆண்டுகள் கட்டுக்கோப்பாக வழி நடத்துவது அவ்வளவு இலகுவான காரியம் கிடையாது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைவர் மு.க.ஸ்டாலினின் கவனத்துக்கு கொண்டு சென்று அவருடைய வாழ்த்துக்களுடன்தான் அல்லது ஆதரவோடுதான் அல்லது இசைவோடு தான் இந்த ஆதரவை ஆட்சி அமைப்பதற்காக வழங்குகிறோம் என்று அறிவித்து விட்டுதான் வழங்கி இருக்கிறோம். குடியரசுத் தலைவர் ஆட்சியை தடுக்க ஆதரவை வழங்கினோம்.

நீங்கள் இவ்வாறு செய்யக்கூடாது என எந்த இடத்திலும் அண்ணன் மு.க.ஸ்டாலின் சொல்லவில்லை. தற்போதைய அரசியல் சூழலை தெரிந்துகொண்டு, அவருடைய பக்குவத்தின் அடிப்படையில் அவர் இந்த விஷயத்தை அணுகினார். நாம் ஒற்றுமையோடு செயல்படுவோம்; தவெக ஆட்சி அமைக்க நாம் இடையூறாக இருக்க வேண்டியதில்லை என தெரிவித்துட்டார். இது அவரின் அரசியல் பக்குவத்தையும், முதிர்ச்சியையும் காட்டுகிறது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வளர்ச்சியை பிடிக்காதவர்கள் தொடர்ந்து காலம் காலமாக எங்களுக்கு எதிராக காழ்ப்புணர்வை கக்கி வருகின்றனர். அவர்கள் திரும்பத் திரும்ப இதை செய்து கொண்டிருக்கிறார்கள்" என்று தெரிவித்தார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## "மேகேதாட்டு அணை விவகாரத்தில் மற்ற கட்சிகள் சொல்வதை கேட்கக் கூடாது" வேளாண் அமைச்சர் வினோத்



கும்பகோணம்:மே 24-
"அனைத்துக் கட்சிகளும் ஒவ்வொன்று சொல்வார்கள். அதையெல்லாம் நாம் கேட்கக் கூடாது. அதையெல்லாம் விடுங்கள், பார்த்துக் கொள்ளலாம்" என்று மேகேதாட்டு அணை விவகாரம் குறித்து வேளாண்மை துறை அமைச்சர் வினோத் தெரிவித்துள்ளார். வேளாண் துறை அமைச்சர் வினோத் இன்று கும்பகோணம் வந்தார். அவரை கட்சியினர் வரவேற்றனர். பகவத் விநாயகர் கோயிலுக்கு சென்ற அவர் தரிசனம் முடித்தபின் செய்தியாளர்களிடம் கூறும்போது, "கும்பகோணத்தில் 2028ம் ஆண்டு நடைபெறும் மகாமகம் சிறப்பாக நடத்தப்படும். கும்பகோணத்தின் முக்கிய பிரச்சினை தொடர்பாக முதல்வரிடம் பேசி உள்ளேன். விரைவில் கும்பகோணம் பகுதியில் நல்லது நடக்கும். ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பது தொடர்பாக திங்கட்கிழமை நடைபெறும் சட்டப்பேரவை கூட்டத்தொடரில் ஆலோசனை செய்யப்படும். இதேபோல் தேர்தல் அறிக்கையில் உள்ள விவசாயிகள் கடன் தள்ளுபடி தொடர்பாக முதல்வர் அறிவிப்பார்" என்றார். மேகேதாட்டு அணை கட்டப்படுவது தொடர்பாக கேட்டதற்கு, "அனைத்துக் கட்சிகளும் ஒவ்வொன்று சொல்வார்கள். அதையெல்லாம் நாம் கேட்க கூடாது. அதையெல்லாம் விடுங்கள், பார்த்துக் கொள்ளலாம்" என்றார். கரூரில் விவசாயி மீது துப்பாக்கி சூடு நடத்தியது தொடர்பாக கேட்டதற்கு, "நான் பதவி ஏற்று 3 நாட்கள்தான் ஆகிறது" என பதிலளித்தார்.

## பெண்கள் பாதுகாப்பில் முதல்வர் விஜய் தனி கவனம் செலுத்த டிடிவி தினகரன் வலியுறுத்தல்



சென்னை:மே 24-
கோவை சிறுமி படுகொலையை சுட்டிக்காட்டி, பெண்களின் பாதுகாப்பு விஷயத்தில் முதல்வர் விஜய் தனி கவனம் செலுத்த வேண்டும் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கோயம்புத்தூர் மாவட்டம் சூலூர் பகுதியில் தனது வீட்டிற்கு அருகே விளையாடிக் கொண்டிருந்த 10 வயது சிறுமி அதே பகுதியைச் சேர்ந்த சிலரால் கடத்திச் செல்லப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்து குளக்கரையில் வீசப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. தமிழகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் மற்றும் பெண் களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக மட்டுமல்லாமல் சமூகத்தின் அடிப்படை மனிதநேயத்தையே கேள்விக்குறியாக்கும் அவலநிலையை ஏற்படுத்தியுள்ளன. எனவே, கொடூரமான முறையில் சிறுமியைக் கொலை செய்த மனித நேயமற்ற மிருகங்களைக் கைது செய்து அவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, பெண்களின் பாதுகாப்பு விஷயத்தில் தனி கவனம் செலுத்த வேண்டும் என முதல்வர் விஜயை வலியுறுத்துகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

## 'ஜனநாயகன்' லீக் விவகாரம்: 9 பேரின் ஜாமீன் மனுக்கள் தள்ளுபடி



சென்னை:மே 24-
'ஜனநாயகன்' படம் சட்டவிரோதமாக இணையத்தில் வெளியான விவகாரத்தில் கைதான 9 பேரின் ஜாமீன் மனுக்களை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முதல்வர் விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' படம் கடந்த ஜனவரியில் பொங்கல் பண்டிகைக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தணிக்கை பிரச்சினையால் மறு ஆய்வுக்குழுவின் முன்பாக நிலுவையில் உள்ளது. இந்நிலையில், இந்தப் படம் கடந்த ஏப்.3ம் தேதி சட்டவிரோதமாக இணையதளத்தில் வெளியானது. இது தொடர்பாக படத்தயாரிப்பு நிறுவனமான கே.வி.என். புரொடக்‌ஷன்ஸ் சார்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், சென்னை சைபர் க்ரைம் போலீஸார் 21 பேர் மீது வழக்குப்பதிவு செய்து சிலரை கைது செய்துள்ளனர். மற்றவர்களை தேடி வருகின்றனர். இந்த வழக்கில் கைதான ஸ்ரீநாத், சஞ்சய், பாலகிருஷ்ணன், மணிகண்டன், ருத்ரன், ராஜேஷ், பிரசாந்த், செல்வம் மற்றும் ரஜினி ஆகிய 9 பேர் ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி ஆர்.சக்திவேல் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது படத்தயாரிப்பு நிறுவனமான கே.வி.என் புரொடக்‌ஷன்ஸ் சார்பில் வழக்கறிஞர் விஜயன் சுப்ரமணியன் ஆஜராகி, "இந்த வழக்கில் கைதான 3 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். வழக்கின் முக்கிய குற்றவாளிகள் பலர் தொடர்ந்து தலைமறைவாக உள்ளனர். எனவே, 9 பேருக்கும் ஜாமீன் வழங்கக் கூடாது" என கடும் ஆட்சேபம் தெரிவித்தார். அதையடுத்து நீதிபதி, 9 பேரின் ஜாமீன் மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

## உ.பி., மேற்கு வங்க மாநிலங்களை அடுத்து டெல்லியில் பக்ரீத்துக்குப் பலியிட கட்டுப்பாடு

புதுடெல்லி:மே 24-
இஸ்லாமியர்களின் பக்ரீத் பண்டிகை மே 28ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. அந்த நாளில் இறைவனின் பெயரில் முஸ்லிம்கள் கால்நடைகளை பலியிடுவது வழக்கம். உ.பி.யில் சில பகுதிகளில் தெருக்கள், சந்துக்களிலும் பலியிடப்பட்டது. அதன்பின், கடந்த 2017ம் ஆண்டு பாஜக ஆட்சி அமைந்தது முதல் பொதுவெளியில் பலியிட தடை செய்யப்பட்டது. இது சர்ச்சையானது.இந்நிலையில், மேற்கு வங்க மாநிலத்தில் பாஜக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள சுவேந்து அதிகாரியும், கால்நடை பலியிட கட்டுப்பாடுகளை விதித்துள்ளார். இதற்கு ஏஜேயுபி கட்சித் தலைவர் ஹுமாயூன் கபீர் உள்ளிட்டோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதுகுறித்து ஹுமாயூன் கபீர் கூறுகையில், "முஸ்லிம்களில் பலர் மாட்டிறைச்சி உண்கின்றனர். முதலில் வேண்டும். மாட்டிறைச்சி ஏற்றுமதியால் மத்திய அரசு பணம் ஈட்டுகிறது. அதற்கு தடை விதிக்கப்படுமா? நான் நேரடியாக முதல்வருக்கு எச்சரிக்கை விடுக்கிறேன். நெருப்புடன் விளையாட வேண்டாம்" என்று கூறியிருந்தார். தற்போது பாஜக ஆளும் டெல்லி அமைச்சர் கபில் மிஸ்ரா, "கால்நடைகள், பசுக்கள், கன்றுகள், ஒட்டகங்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட விலங்குகளைப் பலியிடுவது முற்றிலும் சட்டவிரோதமானது. அவ்வாறு செய்வோர் மீது குற்றவியல் வழக்குகள் தொடரப்படும். அனுமதிக்கப்பட்ட விலங்குகளை சட்டப்பூர்வமான இடங்களில் மட்டுமே பலியிட அனுமதிக்கப்படும். பொதுவெளியில் பலியிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். டெல்லியில் சாலைகள், தெருக்களில் பலியிடுவது தடை செய்யப்பட்டுள்ளது" என்று அறிவித்துள்ளார். பக்ரீத் பலியிடுதலுக்குப் பிறகு கழிவுகளைச் சாக்கடைகள், வடிகால்கள் அல்லது பொது இடங்களில் கொட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு, சட்டவிரோத விலங்கு வதை, அங்கீகரிக்கப்படாத விலங்கு வர்த்தகம் ஆகியவற்றுக்கு எதிராக அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். விலங்குகளின் நலன், பொதுச் சுகாதாரத்தை உறுதி செய்யும் வகையில், அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே பலியிட அனுமதிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அமைச்சர் கபில் மிஸ்ரா உத்தரவிட்டுள்ளார்.

## கோவை சிறுமி பாலியல் வன்கொடுமை கொலை வழக்கில் இருவர் கைதானது எப்படி? ஐஜி ரம்யா பாரதி விளக்கம்



சென்னை:மே 24-
"கோவை சூலூரில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். போக்சோ சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என கோவை ஐஜி ரம்யா பாரதி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: "கடந்த 21 ஆம் தேதி இரவு சுமார் 8.30 மணி அளவில், கோவை மாவட்டம் சூலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதி வீட்டின் வெளியே விளையாடிக் கொண்டிருந்த 10 வயது சிறுமி மாலை சுமார் 5 மணி அளவில் காணாமல் போனதாக தகவல் கிடைக்கப் பெற்றது. தகவல் கிடைத்தவுடன் காவல் துறையினர் உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டு, புகார் பெற்று அதே இரவு சுமார் 10 மணியளவில் குழந்தை காணாமல் போனது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. காவல் கண்காணிப்பாளர் இதனைத் தொடர்ந்து கருமத்தம்பட்டி உட்கோட்ட துணைக் மேற்பார்வையில் ஐந்து தனிப்படைகள் அமைக்கப்பட்டு, காணாமல் போன சிறுமியை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. விசாரணையின்போது சிசிடிவி காட்சிகள் மற்றும் தொழில்நுட்ப ஆதாரங்கள் ஆய்வு செய்யப்பட்டதில், நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த கார்த்தி (33), சிறுமியின் குடும்பத்துக்குப் பழக்கமான அண்டை வீட்டுக்காரர் என்பது தெரியவந்தது. அதோடு, சிறுமியை அழைத்துச் சென்றதும் உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கண்ணம்பாளையம் பகுதியில் உள்ள மரியா ரோஸ் கார்டன் அடுக்குமாடி குடியிருப்பின் முதல் மாடியில் பதுங்கி இருந்த குற்றவாளியை காவல் துறையினர் சுற்றிவளைத்தனர். கார்த்தி அப்போது தப்பிக்க முயன்றபோது, மேல்மாடியில் இருந்து குதித்ததில், அவரது வலது கை மற்றும் வலது காலில் முறிவு ஏற்பட்டது. பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். விசாரணையில், குற்றவாளி கார்த்தி, சிறுமியை ஆசை வார்த்தை கூறி ஏமாற்றி அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்து, பின்னர் கண்ணம்பாளையம் குளம் அருகிலுள்ள தென்னைத் தோட்டத்தில் கழுத்தை நெரித்து கொலை செய்ததை ஒப்புக்கொண்டார். மேலும், நடைபெற்ற விசாரணையில், பாரதிபுரம், பள்ளபாளையத்தை சேர்ந்த மோகன் (30) என்பவர், முக்கிய குற்றவாளிக்கு உறுதுணையாக இருந்தது தெரியவந்தது. இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார். கைது தற்போது கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த வழக்கு சிறுமி மீதான பாலியல் வன்கொடுமை தொடர்புடையது என்பதால், வழக்கில் போக்சோ சட்டப்பிரிவுகள் சேர்க்கப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். 24 நேரத்துக்குள் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு விரைவாக அரசின் நிவாரண உதவித் தொகை கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று கோவை ஐஜி ரம்யா பாரதி தெரிவித்தார்.

## பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பயோமைனிங் திட்டம் மூலம் 94 ஏக்கர் நிலம் மீட்பு



சென்னை:மே 24-
பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில், பழைய குப்பை அகற்றப்பட்டு 94 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. பெருங்குடி குப்பைக் கிடங்கில் 225 ஏக்கர் நிலப்பரப்பில், குவிக்கப்பட்டிருந்த சுமார் 29.28 லட்சம் கனமீட்டர் மரபுவழி (Legacy) கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த பயோ மைனிங் முறையில் அகற்றி நிலத்தை மீட்டெடுக்கும் பணிகள் ரூ.350 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தம் உள்ள 6 சிப்பங்களில், சிப்பம் 3, 4 மற்றும் 5 ஆகியவற்றில் பணிகள் முழுமையாக நிறைவு பெற்று 94 ஏக்கர் நிலப்பரப்பு மீட்டெடுக்கப்பட்டுள்ளது. பெருங்குடியில் நிறைவு செய்யப்பட்ட பயோமைனிங் திட்டத்தை மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன் நேற்று நேரில் ஆய்வு செய்தார். இத்திட்டத்தின் முதல் கட்டத்தில், பயோமைனிங் தொழில் நுட்பத்தின் மூலம் 29,283.98 கனமீட்டர் பழைய திடக்கழிவுகள் அறிவியல் முறையில் அகற்றப்பட்டுள்ளன. பயோமைனிங் திட்டத்தின் மூலம் மீட்கப்பட்ட 94 ஏக்கர் நிலப்பரப்பையும் ஆணையர் பார்வையிட்டார். தொடர்ந்து, பெருங்குடி குப்பைக் கிடங்கில் 2ம் கட்டமாக ரூ.53.60 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் 5.50 லட்சம் டன் பழைய திடக் கழிவுகளின் பயோமைனிங் பணிகளை ஆணையர் பார்வையிட்டு, இப்பணிகளை திட்ட காலத்துக்குள் முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், பெருங்குடி குப்பைக் கிடங்கில் மீட்கப்பட்ட 94 ஏக்கர் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் அமைக்கப்படவுள்ள 100 டன் திறன் கொண்ட உரமாக்கும் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த ஆணையர், பணிகளை விரைந்து முடித்து, ஜூன் 30க்குள் செயல்பாட்டுக்கு கொண்டு வர அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, இணை ஆணையர் (சுகாதாரம்) வீ.ப.ஜெயசீலன், தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப்ரசூல் ஆகியோர் உடனிருந்தனர்.

## சினோரா அசோக் மீது தாக்குதல்: முன்னாள் அமைச்சர் சேகர்பாபு மீது வழக்குப் பதிவு

சென்னை:மே 24-
தவெக வேட்பாளரான சினோரா அசோக் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் சேகர்பாபு மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அண்மையில் நடைபெற்று முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை துறைமுகம் தொகுதியில் திமுக சார்பில் முன்னாள் அமைச்சர் சேகர்பாபுவும், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சினோரா அசோக்கும் போட்டியிட்டனர்.



இதில் சேகர்பாபு வெற்றி பெற்று எம்எல்ஏ ஆனார். முன்னதாக வாக்குப்பதிவு நடைபெற்ற ஏப்ரல் 23ம் தேதி மண்ணடி அங்கப்பன் நாயக்கன் தெருவில் சேகர்பாபு, சினோரா அசோக் தரப்பினரிடையே வாக்குவாதம், தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது சேகர்பாபு தன்னை தாக்கியதாக சினோரா அசோக் வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். மேலும் சேகர்பாபு தரப்பினும் எதிர்தரப்பினர் மீது புகார் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் சினோரா அசோக் அளித்த புகாரின் பேரின் வடக்கு கடற்கரை காவல் நிலைய போலீஸார் சேகர்பாபு மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது சட்ட விரோதமாக கூடுதல், ஆபாசமாக பேசுதல், காயம் விளைவித்தல், கொலை முயற்சி, கொலை மிரட்டல் உட்பட 7 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.



## உயிலை பதிவு செய்ய வேண்டியது கட்டாயம் அல்ல உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு

டெல்லி:மே 24-
தவெக வேட்பாளரான சினோரா அசோக் மீது தாக் இந்திய சட்டப்படி உயில்களை பதிவு செய்ய வேண்டியது இல்லை என உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர். சொத்து உயிலை பதிவு செய்ய வேண்டியது இந்திய சட்டப்படி கட்டாயம் அல்ல, உயிலை பதிவு செய்யாததாலேயே அதன் நம்பகத்தன்மையை கேள்வி எழுப்ப முடியாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

## எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து இறங்கும் போது 2 பேர் உயிரிழப்பு

காத்மாண்டு: மே 24-
எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து இறங்கும் போது அருண் குமார் திவாரி, சந்தீப் அரே என்ற 2 இந்தியர்கள் உயிரிழந்தனர். உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தை சந்தீப் அரே புதன்கிழமையும் அருண் குமார் திவாரி வியாழக்கிழமை மாலையும் அடைந்துள்ளனர். பின்னர் கீழே இறங்கும்போது 4 ஷெர்பா வழிகாட்டிகளின் உதவியுடன் வந்து கொண்டிருந்த திவாரி 'ஹிலாரி ஸ்டெப்' பகுதிக்கு அருகே உயிரிழந்தார். சந்தீப் அரே உடல்நலக் குறைவுக்கு பிறகு ஷெர்பா மீட்புக் குழுவினரால் கீழே கொண்டுவரப்பட்ட நிலையில் உயிரிழந்தார். 21 வயதான சானிகா ஷா மற்றும் எல்லைப் பாதுகாப்பு படையின் அனைத்து பெண் மலையேற்றக் குழுவினர் உள்ளிட்ட பல இந்தியர்கள் வெற்றிகரமாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த நிலையில் இந்த மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த ஆண்டு மலையேற்ற பருவம் தொடங்கிய பிறகு நேபாளத்தின் தெற்கு அடிவார முகாமில் இருந்து சாதனை அளவாக 274 மலையேற்ற வீரர்கள் புதன்கிழமை ஒரே நாளில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்துள்ளனர். இந்த ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தில் ஏற நேபாள அதிகாரிகள் 493 அனுமதிகளை வழங்கியுள்ள நிலையில் இது சாதனை ஆண்டாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1953ல் டென்சிங் நார்கே, சர் எட்மண்ட் ஹிலாரி ஆகியோர் முதன்முறையாக எவரெஸ்ட் சிகரத்தை வெற்றிகரமாக அடைந்ததிலிருந்து, ஒரே ஆண்டில் வழங்கப்பட்ட அதிகபட்ச அனுமதி இதுவாகும்.

## வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் 19 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



சென்னை::மே 24-
தமிழகத்தில் கோவை, சேலம், வேலூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட 19 மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய வங்கக்கடல் பகுதிகளில் சுமார் 3.1 கிமீ முதல் 5.8 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தின் நாளையும் (மே 24), நாளை மறுதினமும் ஒருசில இடங்களிலும், 26 முதல் 29ம் தேதி வரை ஒரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், கரூர், திண்டுக்கல், தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கி.மீ வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும். 26ம் தேதி கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 27ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட குறைவாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, ஊத்து, திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் தலா 4 செமீ, திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம் விருகாவூர், திருப்பத்தூரில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவிக்கப்படாத மின்வெட்டை தடுத்திடுக: தவெக அரசுக்கு பாஜக, அமமுக வலியுறுத்தல்

சென்னை::மே 24-
தமிழகம் முழுவதும் அறிவிக்கப்படாத தொடர் மின்வெட்டால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் ஆகியோர் சாடியுள்ளனர். இது தொடர்பாக, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்ட அறிக்கையில், “தமிழகத்தின் தலைநகர் சென்னை உள்ளிட்ட பிற முக்கியப் பகுதிகளில் தொடர் மின்வெட்டு காரணமாக மக்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். கடந்த முறை தமிழகத்தை தவிக்க வைத்த திமுக அரசுக்கு ஈடு கொடுக்கும் வகையில், தற்போதைய தவெக அரசும் மக்களை இப்படி வதைப்பது கடும் கண்டன



த்துக்குரியது.கொளுத்தும் அக்னி வெயிலில் மின்சாரத்தைத் துண்டித்து குழந்தைகளையும், முதியவர்களையும் படாதபாடு படுத்துவது தான் தவெக அறிவித்த மாற்று அரசியலா? தமிழகத்தில் தடையற்ற மின்சாரம் கிடைக்க முதல்வர் விஜய், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.
டிடிவி தினகரன் வெளியிட்ட அறிக்கையில், “தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பகல் மற்றும் இரவு நேரங்களில் நிகழும் அறிவிக்கப்படாத பலமணி நேர திடீர் மின்வெட்டால், அனைத்து தரப்பு பொதுமக்களும் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.கோடைக் காலங்களில் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானதாக திகழும் மின்சாரம், அறிவிக்கப்படாமல் அடிக்கடி தடை செய்யப்படுவது பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை மட்டுமல்லாது, அவர்களின் ஆரோக்கியமும் பாதிக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. எனவே, தொடர் மின்வெட்டு பிரச்சினையை போக்க போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இனி வரும் காலங்களிலும் அறிவிக்கப்படாத மின்வெட்டை முற்றிலுமாக தடுத்திட வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

## ‘பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யாருக்கெல்லாம் பலன்?’ மோடிக்கு கார்கே கேள்வி

புதுடெல்லி:மே 24-
“தற்போதைய பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யாருக்கெல்லாம் பலன் கிட்டுகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும்” என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், “ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.100ஐ கடந்துள்ளது. மக்களின் பணம் தவணை முறையில் கொள்ளை அடிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மிகவும் குறைவாக இருந்தது. அந்தக் காலத்தில் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை குறைக்கப்படவில்லை. அப்போது மக்களின்



பணம் பகிரங்கமாக கொள்ளை அடிக்கப்பட்டது. அண்மையில் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற்றன. இந்த தேர்தல்கள் முடிந்த உடனேயே பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தியது. அண்மை காலத்தில் 3 முறை விலை உயர்த்தப்பட்டு உள்ளது. இத்தாலி, ஆஸ்திரேலியா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் கலால் வரியை குறைத்து, பெட்ரோல், டீசல் விலையை கட்டுப்படுத்தி உள்ளன. பிரிட்டன், அயர்லாந்து நாடுகளில் எரிசக்திக்காக சிறப்பு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் தற்போதைய பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யார், யாரெல்லாம் பலன் அடைகிறார்கள் என்பது குறித்து பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும்” என்று மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் நீண்ட தொலைவு உள்ளிட்ட காரணங்களால் இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு தினசரி ரூ.1,000 கோடி இழப்பு ஏற்பட்டது. இதை ஈடுகட்ட கடந்த 15ம் தேதி பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு தலா ரூ.3 உயர்த்தப்பட்டது. கடந்த மே 19ம் தேதி ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் தலா 90 பைசா அதிகரிக்கப்பட்டது.இந்த நிலையில், கடந்த 10 நாட்களில் 3வது முறையாக பெட்ரோல், டீசல் விலை இன்று உயர்த்தப்பட்டது. இதன்படி சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் 82 பைசா உயர்ந்து ரூ.105.31க்கும், ஒரு லிட்டர் டீசல் 87 பைசா உயர்ந்து ரூ.96.98க்கும் விற்பனை செய்யப்படுகிறது.‘வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் இந்தியாவின் 23 நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல், டீசல் மீது மத்திய அரசு கலால் வரியை விதிக்கிறது. மாநில அரசுகள் வாட் வரியை விதிக்கின்றன. எண்ணெய் நிறுவனங்கள் சார்பில் பெட்ரோல் நிலைய உரிமையாளர்களுக்கு 10 சதவீதம் கமிஷன் வழங்கப்படுகிறது.
இவை அனைத்தையும் கணக்கிட்டு பெட்ரோல், டீசல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. எண்ணெய் நிறுவனங்களின் இழப்பை ஈடுகட்ட கடந்த 10 நாட்களில் 3 முறை விலை உயர்த்தப்பட்டு உள்ளது. இதன்மூலம் ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் ரூ. 5 வரை விலை உயர்ந்திருக்கிறது. இதேபோல ஒரு கிலோ சிஎன்ஜி விலை ரூ.4 வரை விலை அதிகரித்திருக்கிறது. விலை உயர்த்தப்பட்டாலும் எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து இழப்பை சந்தித்து வருகின்றன’ என்று எண்ணெய் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

## “8,000 தனியார் மருத்துவமனைகளுக்கு திடீர் அனுமதி ஏன்?” தவெக அரசுக்கு சீமான் சரமாரி கேள்வி

சென்னை:மே 24-
“8,000 தனியார் மருத்துவமனைகளுக்கு இப்போது எதற்கு திடீர் அனுமதி வழங்கப்படுகிறது?” என்று கேள்வி எழுப்பியுள்ள நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், “மருத்துவத் துறையில் கண்மூடித்தனமாக தனியார்மயத்தை ஊக்குவிக்கும் விதமாக அரசின் செயல்பாடு உள்ளது” என சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துவோம், கிராமப்புற மருத்துவமனைகளை நவீனமாக்குவோம் என தேர்தலில் வாக்குறுதியளித்து விட்டு, இப்போது, புதிதாக 8 ஆயிரம் மருத்துவமனைகளை திறப்பதற்கு இணையம் வாயிலாக விண்ணப்பித்தாலே தற்காலிக



அனுமதி வழங்கப்படும் எனும் தவெக அரசு அறிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இவ்வாறு மருத்துவத் துறையில் கண்மூடித்தனமாக தனியார்மயத்தை ஊக்குவிக்கும் அரசின் செயல்பாடு, வாக்கு செலுத்திஆட்சி அதிகாரத்தில்ஏற்றி வைத்த மக்களுக்கு செய்யும் ஜனநாயகத் துரோகமாகும்.மேலும், அரசு மருத்துவமனைகளின் குறைபாடுகளையும், சிக்கல்களையும் தீர்த்து, அவற்றை தரம் வாய்ந்ததாக மாற்ற முயற்சி எடுக்காமல், 8 ஆயிரம் தனியார் மருத்துவமனைகளுக்கு இப்போது எதற்கு திடீர் அனுமதி வழங்கப்படுகிறது? மத்தியில் ஆளும் பாஜக அரசும், மாநிலத்தை ஆண்ட முந்தைய திமுக, அதிமுக அரசுகளும் தனியார்மயத்தை அரசின் நிர்வாகக் கொள்கை முடிவாக கொண்டதையே தவெக அரசும் பின்பற்றுமென்றால், எங்கிருக்கிறது மாற்று அரசியல்? எங்கிருக்கிறது மக்களுக்கான ஆட்சி? தனியார் முதலாளிகளின் லாபவெறிக்கு மருத்துவத் துறையை தாரைவார்த்திருப்பது கடும் கண்டனத்துக்குரி யது .எனவே,மருத்துவத் துறையை தனியார்மயமாக்கும் செயலை கைவிட்டு, அரசு மருத்துவமனைகளையும், ஆரம்ப சுகாதார நிலையங்களையும் தரம் உயர்த்தி, தரமான மருத்துவ சிகிச்சைகள் அனைவருக்கும் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தவெக எம்எல்ஏவுடன் வாக்குவாதம்: ராயபுரம் காவல் ஆய்வாளர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்

சென்னை: மே 24-
தவெக எம்எல்ஏவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ராயபுரம் காவல் ஆய்வாளர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார்.சென்னை ராயபுரம் பகுதியில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் இரு தினங்களுக்கு முன்னர் இஸ்லாமிய இளைஞர் ஒருவருக்கு திருமணம் நடைபெற இருந்தது.அப்போது இளம்பெண் ஒருவர், பெண் சமூக ஆர்வலர் மற்றும் உறவினர்கள் சிலருடன் அங்கு சென்று, நீதி வேண்டும் என்ற பதாகை ஏந்தி திருமணத்தை நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.இதனால் அங்கு பரபரப்பான சூழல் ஏற்பட்டது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற ராயபுரம் காவல் நிலைய ஆய்வாளர் சிதம்பரம் பாரதி தலைமையிலான போலீஸார், அந்தப் பெண்ணிடம் விசாரணை நடத்தினர். இதில், அந்தப் பெண் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்.8 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை



வந்த அவர், வடபழனியில் தங்கி அதே பகுதியில் உள்ள ஒரு மாலில் வேலை செய்துள்ளார். அப்போது அவருடன் வேலை பார்த்த சூளைமேடு பகுதியைச் சேர்ந்த இஸ்லாமிய இளைஞர் (திருமணம் நடக்க இருந்தவர்) ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டு காதலாக மாறியுள்ளது.இந்நிலையில், தன்னை இந்த இளைஞர் இஸ்லாம் மதத்துக்கு மாறச் சொல்லியதை அடுத்து அவரும் மதம் மாறியுள்ளார். இந்தச் சூழலில்தான், வேறொரு பெண்ணுடன் திருமணம் நடைபெற இருந்ததும், அதைத் தடுப்பதற்காக வந்ததாகவும் அந்தப் பெண் தெரிவித்தார்.அப்போது, இளம்பெண்ணுக்கு ஆதரவாக வந்த சமூக ஆர்வலர் மற்றும் சிலரை ஆய்வாளர் சிதம்பரம் பாரதி ஒருமையில் திட்டியதோடு தாக்கியதாகக் கூறப்படுகிறது.மேலும், இந்த விவகாரம் குறித்து நியாயம் கேட்டு காவல் நிலையம் சென்ற ராயபுரம் தொகுதி தவெக எம்எல்ஏ விஜய் தாமுவிடமும் வரம்புமீறி பேசியதாகவும் கூறப்படுகிறது. இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.இதுகுறித்து விசாரணை நடைபெற்ற நிலையில், ஆய்வாளர் சிதம்பரம் பாரதியை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி காவல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.



## முதல்வர் விஜய் விரல் நுனியில் விவரங்கள் பேரவை தலைவர் ஜே.சி.டி.பிரபாகர்

புதுச்சேரி: மே 24-
“விரல் நுனியில் முதல்வர் விஜய் விவரங்களை வைத்துக் கொண்டு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்” என தமிழக சட்டப்பேரவை தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் தெரிவித்துள்ளார்.தமிழக சட்டப்பேரவை தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் இன்று புதுச்சேரி வந்தார். முத்தியால்பேட்டையில் நடைபெற்ற விழா ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “என்னுடைய நெருங்கிய உறவினர் தெரசா பெனடிக், கன்னியாஸ்திரிகளுக்கான கர்மேல் மடத்தில் 25 ஆண்டுகள் நிறைவு செய்வதையொட்டி வெள்ளி விழா நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள இங்கு வந்துள்ளேன்.தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் அறுதி பெரும்பான்மை பெற்று இருக்கும் ஓர் அரசு நீடிக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பம். எம்எல்ஏக்களின் விருப்பமும் அதுதான். அதன்படி ஆட்சி தொடரும்” என்றார்.அப்போது, கோவை சிறுமி கொலை உள்ளிட்ட குற்றச் சம்பவங்களால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுவது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு ஜே.சி.டி.பிரபாகர், “ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள முதல்வர் விஜய், விரல் நுனியில் விவரங்களை வைத்து வைத்துக்கொண்டு பல்வேறு திட்டங்களையும், பல்வேறு சீரிய முயற்சிகளையும் மேற்கொள்வதை நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவருக்கு ஒத்துழைப்பு அளிப்பதும் நல்வாழ்த்துகள் கூறுவதும் நமது கடமை” என்று தெரிவித்தார்.தொடர்ந்து, விமான நிலையத்துக்கு தமிழக அரசு நிலம் வழங்க வேண்டும் என்று புதுச்சேரி அரசு கேட்டு வருவது குறித்த கேள்விக்கு, “இது தொடர்பான விவரங்கள் எனக்கு தெரிவிக்கப்படவில்லை. உரிய நேரத்தில் விவரங்கள் தெரிவிக்கப்பட்டால், அரசின் கவனத்துக்கு அதனைக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்” என்று தெரிவித்தார்.




## முதல்வர் அறிவித்த 717 மதுக்கடைகளில் இதுவரை 436 டாஸ்மாக் கடைகள் மூடல்: அரசு

சென்னை:மே 24-
கல்வி நிலையங்கள், வழிபாட்டுத்தலங்கள், பேருந்து நிலையங்கள் அருகில் உள்ள 717 மதுபான சில்லறை விற்பனை கடைகள் மூடப்படும் என்ற முதல்வர் விஜய்யின் அறிவிப்புக்கு இணங்க இதுவரை 436 கடைகள் மூடப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள கடைகளை மூட துறையின் அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருப்பதாகவும் அரசு தெரிவித்துள்ளது.இது தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: “தமிழக முதல்வர் கடந்த 11 அன்று, கல்வி நிலையங்கள், வழிபாட்டுத்தலங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றின் அருகில் உள்ள 717 மதுபான சில்லறை விற்பனை கடைகளை மூடிட அரசாணை பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் க.விக்னேஷ் இன்று (சனிக்கிழமை) தமிழ்நாடு மாநில வாணிபக் கழக தலைமை அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.
இன்று வரை 436 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் அவற்றுடன் இணைந்துள்ள மதுக்கூடங்களும் மூடப்பட்டுள்ளன. மீதமுள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்களை மூடுவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் விக்னேஷ், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மூடப்பட்ட மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்து வந்த கடைப்பணியாளர்களின் நலன் பாதிக்கப்படாத வகையில் அருகிலுள்ள மதுபான சில்லறை விண்பனைக் கடைகளில் பணியமர்த்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.மேலும், அனைத்து சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்துள்ள மதுக்கூடங்கள் இரவு 10 மணிக்கு மூடப்பட வேண்டுமெனவும், அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை விட கூடுதல் விலைக்கு விற்கும் கடைப்பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “கோவை சிறுமி கொலை வழக்கில் குறுகிய காலத்தில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்” ராமதாஸ்

சென்னை: மே 24-
“கோயம்புத்தூர் மாவட்டம் சூலூர் அருகே 10 வயது சிறுமி கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட வழக்கை விரைவு நீதிமன்றத்தில் விசாரித்து குறுகிய காலத்திலேயே தீர்ப்பு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் அருகே 10 வயது சிறுமி கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழக மக்களை உலுக்கியுள்ளது. விளையாடிக்கொண்டிருந்த ஒரு குழந்தை பாதுகாப்பாக வீடு திரும்ப முடியாத நிலை உருவாகியுள்ளது என்பது மிகுந்த வேதனையையும்



அதிர்ச்சியையும் அளிக்கிறது. இந்த மனிதாபிமானமற்ற குற்றச்செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு கடுமையான சட்டப்பூர்வ தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்த வழக்கை விரைவு நீதிமன்றத்தில் விசாரித்து குறுகிய காலத்திலேயே தீர்ப்பு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உரிய நிவாரணமும், உளவியல் ஆதரவும் வழங்கப்பட வேண்டும்.தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது கவலைக்குரியது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய அரசு மற்றும் காவல் துறை, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புற புறநகர் பகுதிகளில் கண்காணிப்பு, இரவு ரோந்து, குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு ஆகியவை வலுப்படுத்தப்பட வேண்டும்.பெண்களும் குழந்தைகளும் அச்சமின்றி வாழக்கூடிய பாதுகாப்பான தமிழகத்தை உருவாக்க தமிழக அரசு உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இந்த கொடூர சம்பவம் மீண்டும் எங்கும் நிகழாத வகையில் நிரந்தரமான பாதுகாப்பு அமைப்புகளை அரசு உருவாக்க வேண்டும்” என தெரிவித்துள்ளார்

## இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் விநியோகம்: சவுதி, அமெரிக்காவை விஞ்சியது வெனிசுலா

புதுடெல்லி:மே 24-
உலகளாவிய எரிசக்தி சந்தையில் நிலவும் மாற்றங்களுக்கு மத்தியில், விலை குறைவான வெனிசுலா கச்சா எண்ணெயை இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் அதிக அளவில் கொள்முதல் செய்யத் தொடங்கியுள்ளன.எரிசக்தி சரக்கு போக்குவரத்து தரவுகளைக் கண்காணிக்கும் ‘கெப்ளர்’ நிறுவனத்தின் புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நடப்பு மே மாதத்தில் மட்டும் வெனிசுலாவிடமிருந்து நாள் ஒன்றுக்கு 4.17 லட்சம் பேரல் கச்சா எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்துள்ளது.இது கடந்த ஏப்ரல் மாதத்தின் (2.83 லட்சம் பேரல்) அளவை விடப் பெருமளவு அதிகமாகும். கடந்த ஒன்பது மாதங்களாக இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் விநியோகம் செய்யாத நிலையில், தற்போது வெனிசுலாவிடமிருந்து இறக்குமதி கிடுகிடுவென உயர்ந்துள்ளது.
மேற்கு ஆசியப் போர் சூழல், ஹார்முஸ் ஜலசந்தியில் ஏற்பட்டுள்ள பதற்றம் ஆகியவற்றால் இந்தியா தனது இறக்குமதி உத்தியை மாற்றி அமைத்துள்ளது.
தற்போது, ரஷ்யா, ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அடுத்தபடியாக வெனிசுலாவிடமிருந்து தான் இந்தியா அதிக அளவிலான எண்ணெயை கொள்முதல் செய்கிறது. இவ்வாறு கெப்ளர் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வெனிசுலாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி அதிகரிப்புக்கு அதன் விலைதான் முக்கிய காரணம். சர்வதேச சந்தையில் மற்ற எண்ணெய் வகைகளை விட வெனிசுலாவின் கச்சா எண்ணெய் மலிவாகக் கிடைக்கிறது.
இது குறித்து ‘கெப்ளர்’ நிறுவனத்தின் தலைமை ஆய்வாளர் நிகில் துபே கூறுகையில், ‘‘பொருளாதார ரீதியான லாபம் மற்றும் இந்திய சுத்திகரிப்பு ஆலைகளின் சுத்திகரிப்பு கட்டமைப்புக்கு ஏற்றதாக இருப்பதால், இந்திய நிறுவனங்கள் வெனிசுலா எண்ணெய் மீது அதிக ஆர்வம் காட்டுகின்றன’’ என்றார்.

## கோவையில் சிறுமி வன்கொடுமை: குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத் தர வேண்டும்; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்

சென்னை: மே 24-
கோவையில் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கை விரைந்து விசாரித்து குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத் தர வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது. இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத வகையில் குழந்தைகள் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு காவல்துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சிறுமியை இழந்து தவிக்கும் பெற்றோருக்கு தமிழக அரசு ரூ.20 லட்சம் இழப்பீடு வழங்கிட வேண்டும் என தமிழ்நாடு அரசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வலியுறுத்தியுள்ளது



# திருப்பூரில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் 1351வது சதய விழா எழுச்சி உரை

திருப்பூர் மே 24-
திருப்பூர் மாவட்ட முத்தரையர் ஒருங்கிணைப்புக் குழு சார்பாக, பேரரசர் சுவரன் மாறன் பெரும்பிடுகு முத்தரையரின் 1351 வது பிறந்தநாள் சதய விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருப்பூரின் அனைத்துப் பகுதிகளிலும் மன்னரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.முதன்மை விழாவானது திருப்பூர் மாவட்ட முத்தரையர் ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தில், தலைவர் டாக்டர் தர்மராஜ் தலைமையில் நடைபெற்றது.இவ்விழாவில் ஒருங்கிணைப்புக் குழு நிர்வாகிகள் வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி, வெங்கடாசலம், வெள்ளியங்கிரி, ராஜ், ராஜசேகரன், பாண்டியம்பலம், சுரேஷ், ஜோதிபாசு, கோபாலகிருஷ்ணன், சரவணன், திருமலை ராஜா, சரவணன், ராஜாமணி, முருகேஷ், சத்யநாராயணன், சபரி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட முத்தரையர் சமுதாயப் பொதுமக்கள் கலந்து கொண்டனர். விழாவின் இறுதியில் வந்திருந்த அனைவருக்கும் தேநீர் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டு நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.

# மனிதாபிமானம்: தென்னை மரத்திலிருந்து விழுந்து பாதிப்பு; மௌனிதரனுக்கு மக்கள் சமூக சேவை அமைப்பு நிதியுதவி



ஈரோடு மே,24-
ஈரோடு பகுதியைச் சேர்ந்த மௌனிதரன், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தென்னை மரத்திலிருந்து தவறி விழுந்து, உட்காரக் கூட முடியாதபடி உடல்நிலை மிகவும் மோசமடைந்து படுக்கையில் இருந்து வந்தார்.அவரது வறுமை மற்றும் சிகிச்சை நிலையை அறிந்து, "மக்கள் சமூக சேவை" அமைப்பின் நிறுவனர் ஜே.வினோத்குமார் உடனடியாக உதவ அறிவுறுத்தினார். அவரது உத்தரவின் பேரில், அமைப்பின் தலைமைச் செயலாளர்கள் மௌனிதரனை நேரில் சந்தித்து, அவருக்குத் தேவையான அவசர நிதி உதவியை வழங்கினர்.
இந்நிகழ்வில் மக்கள் சமூக சேவை அமைப்பின் தலைமைத் தலைவர் முருகானந்தம், கிழக்கு மாவட்டச் செயலாளர் சின்னசாமி மற்றும் அமைப்பின் வளர்ச்சிப் பணிகளை முன்னெடுக்கும் கருப்புசாமி ஆகியோர் பங்கேற்றனர். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்குத் துரிதமாக நிதியுதவி வழங்கிய அனைத்து நிர்வாகிகளுக்கும் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.
சக்கரவியூகம் வாய்ஸ்: இரண்டு வருடங்களாகப் படுக்கையில் முடங்கிக் கிடந்த ஏழைத் தொழிலாளி மௌனிதரனின் நிலையை அறிந்து, உடனடியாகக் களமிறங்கி நிதியுதவி செய்த மக்கள் சமூக சேவை அமைப்பின் நிறுவனர் ஜே.வினோத்குமார் மற்றும் தலைவர் முருகானந்தம் உள்ளிட்ட நிர்வாகிகளின் மனிதாபிமானச் செயலுக்கு அப்பகுதி பொதுமக்கள் பாராட்டு.



# 10ஆம் வகுப்பில் 492 மதிப்பெண்கள்: புளியங்குடி மாணவிக்கு தவெகவினர் நேரில் பொன்னாடை அணிவித்து வாழ்த்து

புளியங்குடி மே 24-
தமிழகத்தில் அண்மையில் வெளியான 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில், தென்காசி மாவட்டம் புளியங்குடி முகைதீன் ஆண்டவர் கமிட்டி உயர்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவி மை. அம்ரீன் பாத்திமா 492 மதிப்பெண்கள் பெற்று அசத்தியுள்ளார். இந்த உயரிய மதிப்பெண்ணின் மூலம் அவர் பள்ளி அளவில் முதலிடத்தையும், தென்காசி மாவட்ட அளவில் மூன்றாமிடத்தையும் பிடித்து சாதனை படைத்துள்ளார்.பள்ளிக்கும் பகுதிக்கும் பெருமை சேர்த்த மாணவி அம்ரீன் பாத்திமாவை பாராட்டும் விதமாக, தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) தென்காசி மாவட்டச் செயலாளர் மாரியப்பன் தலைமையில் நகர, ஒன்றிய, வார்டு செயலாளர்கள் மற்றும் மாவட்ட, கிளை கழக நிர்வாகிகள், மாணவிக்குச் சிறப்பான வரவேற்பு அளித்து, பொன்னாடை போர்த்தி, இனிப்புகள் வழங்கி தங்களது நெஞ்சார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்தனர். மேலும், மாணவியின் உயர்கல்வி சிறக்க தங்களது வாழ்த்துகளையும், ஊக்கத்தையும் பகிர்ந்து கொண்டனர்.



# காங்கிரஸ் கட்சியை அவமரியாதையாக பேசிய முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

திசையன்விளை.மே,24-
நெல்லை மாவட்டம் திசையன்விளையில் ராதாபுரம் தொகுதி காங்கிரஸ் சார்பில் காங்கிரஸ் கட்சியை மரியாதைக் குறைவாக பேசிய முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் பெட்ரோல் டீசல் விலை உயர்த்திய மத்திய அரசை கண்டித்து, கண்டன ஆர்ப்பாட்டம் பழைய பேருந்து நிலையம் அருகில் நடந்தது. நிகழ்ச்சிக்கு ராதாபுரம் தொகுதி காங்கிரஸ் பொறுப்பாளர் விவேக் முருகன் தலைமை வகித்தார். திசையன்விளை நகர காங்கிரஸ் தலைவர் ஏவிஜே .ஆல்பர்ட் ராதாபுரம் மேற்கு வட்டார காங்கிரஸ் தலைவர் முருகன், கிழக்கு வட்டார தலைவர் அந்தோணி ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் பெட்ரோல் விலை உயர்வை கண்டித்து விவேக் முருகன் மற்றும் காமராஜர் நற்பணி மன்ற தலைவர் எஸ். ஜி .ராஜன் ஆகியோர் பேசினார். அனிதா ராதாகிருஷ்ணனை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. அனிதா ராதாகிருஷ்ணன் உருவப்படத்தை சில காங்கிரஸ் நிர்வாகிகள் துடைப்பம் கொண்டு அடித்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் விஜய பெருமாள், செயலாளர் மருதூர் மணிமாறன், இணைச் செயலாளர் ஐசக், மாவட்ட ஆர்டிஐ பிரிவு தலைவர் ராஜீவ் , நகர காங்கிரஸ் செயலாளர் சங்கர் மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் பொன்ராஜ், தனசிங், குட்டம் சிவாஜி முத்துக்குமார், சங்கனாங்குளம் வடிவேல், குமார், பொன்சேகர், முருகேசன், கிருபாகரன் , ராஜபாண்டி உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிமுடிவில் தமிழக தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் சார்பில் இரண்டு பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றதை கொண்டாடும் வகையில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கப்பட்டது.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலம்2, வார்டு2க்குட்பட்ட பாண்டியன் நகர் பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தைப் நேரில் பார்வையிட்டு, அங்குள்ள உணவின் தரம் மற்றும் தூய்மை குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



■ கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி, ஈரோடு காலிங்கராயன் விருந்தினர் மாளிகைக்கு வருகை தந்தார். அப்போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அமைச்சருக்கு மலர்க்கொத்து வழங்கி அன்புடன் வரவேற்றார். நிகழ்வின் போது, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன் அவர்கள் உடனிருந்தார்.



■ கைத்தறி, ஜவுளி துறை அமைச்சர் விஜய் பாலாஜி, ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு(FATIA) தலைவர் V.K.ராஜமாணிக்கம், பொதுச் செயலாளர் P.ரவிச்சந்திரன், பொருளாளர் ஸி.முருகானந்தம், இணைச் செயலாளர்கள் K.ஜிப்ரி, N.T.மூர்த்தி, இயக்குனர் K.சிவக்குமார் FATIA FAIR vice chairman P.சின்னச்சாமி, நிதி வளர்ச்சி குழு உறுப்பினர் N.கருணாகரன் ஆகியோர் நேரில் சந்தித்து தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026ல் வெற்றி பெற்றதற்கும், அமைச்சராக பதவியேற்றதற்கும் வாழ்த்து தெரிவித்து அவரது பணி சிறக்க வாழ்த்தினார்கள்.




# அலங்காநல்லூரில் 200க்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் தமிழக வெற்றிக் கழகத்தில் ஐக்கியமான அதிமுக விக்கெட்

அலங்காநல்லூர் மே 24-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில், தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் விஷால்கிருஷ்ணா தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா மற்றும் ஒன்றியச் செயலாளர் ஹரிஷ் ஆகியோர் முன்னிலையில், மதுரை மேற்கு தெற்கு அதிமுக ஒன்றியச் செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன் அதிமுகவிலிருந்து விலகித் தன்னை தவெகவில் இணைத்துக் கொண்டார்.முன்னதாக அலங்காநல்லூர் முனியாண்டி கோவில் அருகே உள்ள தவெக சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா அலுவலகத்திற்கு வருகை தந்த அரியூர் ராதாகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர் விஷால்கிருஷ்ணா மற்றும் எம்.எல்.ஏ கருப்பையா ஆகியோருக்குக் கைத்தறி ஆடை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து, மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினரும் அரியூர் ராதாகிருஷ்ணனுக்கு தவெக கட்சி வேட்டி அணிவித்து முறைப்படி வரவேற்றனர். அவருடன் அவரது ஆதரவாளர்கள் 200க்கும் மேற்பட்டோர் இணைந்தனர்.மேற்கு ஒன்றியச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் தனசேகரன், கார்த்திக், இணைச் செயலாளர் ராமநாதன், அலங்காநல்லூர் பாலாஜி மற்றும் வாடிப்பட்டி வழக்கறிஞர் தியாகராஜன், தாமு உள்படப் பலர் கலந்து கொண்டனர்.

# உலகளவில் 120 கோடி பேர் மனநல பிரச்சினைகளால் பாதிப்பு

லண்டன்:மே,24-
இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் 'தி லான்செட்' மருத்துவ இதழில் வெளியாகி உள்ள ஆய்வுக் கட்டுரையில் இதுகுறித்து கூறியிருப்பதாவது: உலகளவில் மனநலம் தொடர்பான பிரச்சினைகளில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 120 கோடியாக உள்ளது.



இது கடந்த 1990ம் ஆண்டுக்குப் பிறகு 2 மடங்காகும். இதுபோன்ற பாதிப்பு பெண்களிடம்தான் அதிகமாகக் காணப்படுகிறது. அதே நேரத்தில் ஆட்டிசம், கவனக் குறைபாடு, ஆளுமை குறைபாடு போன்றவை ஆண்களிடம் காணப்படுகின்றன.இதேபோல் கடந்த 1990ம் ஆண்டுக்குப் பிறகு பதற்றம் 158 சதவீதமும், மனச்சோர்வு அல்லது மன அழுத்தம் 131 சதவீதமும் அதிகரித்துள்ளது. இந்த பூமியில் 7 பேரில் ஒருவர் மனநல பாதிப்பில் வாழ்கிறார்.கரோனா தொற்றுக்கு முன்பே பதற்றம், மன அழுத்தம் போன்றவை அதிகமாக இருந்தன. உலகளவில் கரோனா காலத்திலும், அதற்குப் பிறகும் அந்தப் பிரச்சினை வேகமாக அதிகரித்துவிட்டது. அதன் பிறகு பழைய நிலைக்கு வரவில்லை.அதிலும் கடந்த 2023ம் ஆண்டுதான் இந்தப் பிரச்சினை உச்ச கட்டத்தில் இருந்துள்ளது. குறிப்பாக 15 வயது முதல் 19 வயதுள்ள இளைஞர்கள்தான் மனநலம் பாதிப்பு போன்ற பிரச்சினைகளில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.இதுபோன்ற பிரச்சினைகளுக்கு உலகளவில் மனநல சேவைகளை அதிகரிப்பது மட்டும் தீர்வாகாது. வாழ்க்கை முறையில் தெரபி, தேவைப்படும் நேரங்களில் மருந்துகள், உணவு, உடற்பயிற்சி, உறக்கம், சமூக ஈடுபாடு போன்ற மாற்றங்களையும் கொண்டு வரவேண்டும்.
இவ்வாறு லான்செட் இதழில் கூறப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கட்டுரையின் முதன்மை ஆசிரியர் டாக்டர் டேமியன் சன்டோமவ்ரோ கூறும்போது, ''இந்த அளவுக்குப் பாதிப்பு இருப்பதை அறிந்து உண்மையிலேயே அதிர்ச்சி அடைந்தேன்'' என்று கூறியுள்ளார். இவரது குழுவினர் 12 பாதிப்புகள் குறித்து விரிவான ஆய்வு நடத்தி தகவல்களை வெளியிட்டுள்ளனர்.



■ திசையன்விளை அருகே உள்ள சூடுஉயர்ந்தான்விளையைச் சேர்ந்த 'ஸ்ரீ முத்து டிராவல்ஸ்' உரிமையாளர் பி.எம்.தில்லை முத்துக்குமார், தமிழக வெற்றிக்கழக நெல்லை மாவட்ட செயலாளர் ராஜகோபால் அவர்களை நேரில் சந்தித்து, தன்னை முறைப்படி தமிழக வெற்றிக்கழகத்தில் இணைத்துக் கொண்டார். இந்த நிகழ்வின் போது, திசையன்விளை நகரச் செயலாளர் 'கில்லி' ராஜா மற்றும் தவெக நிர்வாகிகள் ஜெயம் லிவிங்ஸ்டன், முத்துராமலிங்கம் உட்பட கழகப் பொறுப்பாளர்கள் பலர் உடனிருந்தனர்.



■ அரசு முறைப் பயணமாகப் புதுடெல்லி சென்றுள்ள புதுச்சேரி மாநில உள்துறை மற்றும் கல்வித்துறை அமைச்சர் ஆ.நமச்சிவாயம், பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேரில் சந்தித்து மரியாதை நிமித்தமாகப் பேசினார். அதனைத் தொடர்ந்து, டெல்லியில் பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்திய தேசிய தலைவர் நிதின் நபின் அவர்களையும் அமைச்சர் ஆ.நமச்சிவாயம் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000